Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 48/2022**

**Deposition of PW.2 (LW.2)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மதன் பரமசிவம் | ஜாதி | : | |
| த/பெ | : | ஜோதிபரமசிவம் | தொழில் | : | ஓட்டுநர் |
| கிராமம் | : | ஒட்டன்சத்திரம் | சமயம் | : | |
| தாலுகா | : | ஒட்டன்சத்திரம் | வயது | : | 49/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.05.2026.

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் ஒட்டன்சத்திரத்தில் குடியிருந்துகொண்டு ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 சண்முகத்தை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். நாங்களும், ஆஜர் எதிரியும் தற்போது சமாதானமாக சென்றுவிட்டோம். ஆஜர் எதிரி எங்களை வழிமறித்து அசிங்கமாக பேசவில்லை, அடிக்கவில்லை, கொலை மிரட்டல் விடுக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் சமாதான மனுவில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு பிறழ்சாட்சியாக மாறியுள்ளதால் சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.**

கடந்த 18.10.2021 ஆம் தேதி 13.00 மணிக்கு நானும், சண்முகமும் சின்னாளபட்டி, RC ரோட்டில் உள்ள ராஜா மெடிக்கல்லில் மாத்திரை வாங்கிவிட்டு திரும்ப வந்து கொண்டிருந்தோம் என்றும், அப்போது ஆஜர் எதிரி

எங்களை வழிமறித்து தகதா வார்த்தைகளால் திட்டி, அடித்து காயப்படுத்தினார் என்றும், அருகில் இருந்த நபர்கள் வரவே எங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிவிட்டு சென்றார்கள் என்றும், நடந்த சம்பவம் சம்பந்தமாக எதிரி மீது நடவடிக்கை எடுக்கும் படி அ.சா.1 சண்முகம் சின்னாளபட்டி காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்தார் என்று போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறினார்.

**Sd/-Thiru. S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor